இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 - முரசு: 83 - ஒலி: 124 - திருவள்ளுவர் ஆண்டு 2055 - கார்த்திகை 28 - வெள்ளிக்கிழமை 13 டிசம்பர் 2024 - திருச்சி ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 124: Thiruvalluvar Year - 2055 - Karthigai 28 - Friday 13 December 2024 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## கேரள மாநிலம் – வைக்கத்தில் – கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் விழா!

# தந்தை பெரியார் நினைவகம் : முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## வைக்கம் போராட்ட வெற்றியின் நூற்றாண்டு நிறைவு விழாவிலும் பங்கேற்றுப் பேருரையாற்றினார்!

**வைக்கம், டிச. 13-**

**கேரளாவில் உள்ள வைக்கத்தில் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார். இவ்விழாவில் கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் உள்ளிட்ட முன்னணியினர் பங்கேற்றனர்.**

**முன்னதாக விழாவில் பங்கேற்பதற்காக கொச்சி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.**





“தீண்டாமை இந்த நாட்டின் சாபக்கேடு” என்றார் அண்ணல் காந்தியடிகள். தீண்டாமைக் கொடுமையை ஒழித்திட கேரள மண்ணில் வைக்கம் நகரில் நடைபெற்று வெற்றி கண்ட இந்தியாவின் முதல் போராட்டம் வைக்கம் போராட்டம்!



**தடையை உடைத்த போராட்டம்!**

“தொட்டால் தீட்டு” என்பார்கள். தொடாமலேயே, சிலரைக் கண்ணால் கண்டாலேயே தீட்டு என்ற வழக்கமும் ஒரு காலத்தில் இருந்துள்ளது. அதையெல்லாம் விட, கேரள மாநிலம் வைக்கம் நகரில் மகாதேவர் கோவில் இருக்கும் தெருவில் நடந்தாலேயே தீட்டாகிவிடும்; ஆதலால், கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களிலும், கோவிலுக்கு எதிரே உள்ள தெருவிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஈழுவர்கள், தீயர்கள், புலையர்கள் முதலான சமுதாயத்தினர் நடந்து செல்லவே கூடாது என்னும் கொடிய தடை இருந்தது. அந்தத் தடையை உடைத்திட 1924 ஆம் ஆண்டில் நடைபெற்ற போராட்டம்தான் வைக்கம் போராட்டம்!

வைக்கம், கேரள மாநிலத்தின் அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்தில் அடங்கியிருந்த நகரமாகும். அந்நகரிலுள்ள மகாதேவர் கோவிலைச் சுற்றி அரசு அலுவலகங்கள், நீதிமன்றம் எல்லாம் இருந்தன.

ஈழவர் சமுதாயத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் மாதவன் என்பவர் தீண்டத்தகாதவர் என்பதால், அந்த நீதிமன்றத்திற்குள் செல்ல முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது. இதனை எதிர்த்துத்தான் வழக்கறிஞர் மாதவன், கேசவ மேனன், டி.கே.மாதவன், பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் முதலான பலர் போராடினார்கள். அப்படிப் போராட்டம் நடத்திய அனைவரையும் திருவாங்கூர் சமஸ்தான போலீசார் கைது செய்தனர். அதனால், போராட்டம் நின்றுவிடும் சூழ்நிலை உருவானது. அப்போது இறுதியாக கைதாகிச் சிறை சென்ற பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப், கேசவ மேனன் ஆகியோர் கையெழுத்திட்டு; அப்போது, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களுக்குக் கடிதம் எழுதி, தாங்கள்தான் வைக்கம் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தி வெற்றி தேடித்தேர வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். அந்தக் கடிதம் கிடைத்ததும், 13.04.1924 அன்று வைக்கம் நகருக்கு வந்த தந்தை பெரியார் அவர்களால் போராட்டம் தீவிரம் அடைந்தது.

திருவாங்கூர் மகாராஜா ஏற்கனவே பலமுறை ஈரோடு நகருக்கு வந்து தந்தை பெரியார் இல்லத்தில் விருந்தினராகத் தங்கியிருந்தவர். ஆதலால், தந்தை பெரியார் அவர்களைத் தம் விருந்தினராக நடத்த விரும்பினார். அதைக் காவல்துறையினரும் மகாராஜாவின் அலுவலர்களும் பெரியாரிடம் தெரிவித்தனர். தந்தை பெரியார் அவர்கள், நான் அரச விருந்தாளியாக இங்கு வரவில்லை என நயமாகக் கூறி மறுத்துவிட்டார்.

அதன் பின்னர், தந்தை பெரியார் அவர்களின் போராட்டத்தில் மக்கள் திரண்டதைக் கண்டு பொறுக்க முடியாத நிலையில், திருவாங்கூர் போலீசார் தந்தை பெரியார் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். முதல் முறை 1 மாதமும், இரண்டாவது முறை 6 மாதமும் கடுங்காவல் தண்டனை வழங்கி, தந்தை பெரியார் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

தந்தை பெரியார் கைதாகிச் சிறையில் இருந்தபோது, தந்தை பெரியார் அவர்களின் துணைவியார் அன்னை நாகம்மையார் அவர்களும், தங்கை கண்ணம்மாள் அவர்களும் வைக்கம் வந்து, போராட்டக்களத்தில் இறங்கினர்.

வைக்கம் நகரைச் சுற்றியிருந்த கிராம மக்களும் திரண்டு தொடர்ந்து போராடியதால் திருவாங்கூர் சமஸ்தான அரசு பணிந்து, மகாதேவர் கோவில் தெருக்களில் ஈழவர் முதலான வகுப்பார் நடந்து செல்வதற்கு இருந்த தடையை நீக்கி, எல்லோரும் செல்லலாம் என்று ஆணைபிறப்பித்தது.

**‘வைக்கம் வீரர்’ என திரு.வி.க. பாராட்டு!**

இப்படி, வைக்கம் போராட்டத்தை வெற்றிபெறச் செய்ததால் தந்தை பெரியார் அவர்களைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் “வைக்கம் வீரர்” எனப் பாராட்டி எழுதினார்.

அதன்படி வைக்கத்தில், கோயில் நுழைவுப் போராட்டம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் கடந்துவிட்டது. சமூகநீதிக்கான இந்த போராட்டத்தின் வெற்றியில் தந்தை பெரியார் ஆற்றிய பங்களிப்பை நினைவுகூரும் வகையில், வைக்கத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் 70 சென்ட் பரப்பில் அவருக்கு நினைவகம் அமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.

இதில், பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சிக் கூடம், நூலகம், பார்வையாளர் மாடம், சிறுவர் பூங்கா உள்ளிட்டவை அமைந்துள்ளன. இந்த கட்டிடங்கள் பழமையானதால், 8 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பில், தந்தை பெரியாரின் நினைவிடத்தை புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்.



புனரமைக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று திறந்து வைத்தார். கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் விழாவிற்கு தலைமை வகித்தார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் முன்னிலை வகித்தார். இதையடுத்து, வைக்கம் போராட்ட வெற்றியின் நூற்றாண்டு நிறைவு விழாவிலும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ. வேலு, மு.பெ.சாமிநாதன் மற்றும் கேரள அமைச்சர்கள், உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கொச்சியில் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!**

முன்னதாக, தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் திறப்பு விழாவில் கலந்துகொள்ள கொச்சி சென்றடைந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, விமான நிலையத்தில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் செண்டை மேளம் முழங்க கேரள மாநில தி.மு.க. வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

---

### மாற்றங்களுக்கு விதை தூவிய

## வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவில் பெருமிதம்!

சென்னை, டிச. 12 –

நேற்று (12.12.2024) நடைபெற்ற வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் இதுகுறித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நூறாண்டுகளுக்கு முன்பு நமது சமூகம் எப்படியிருந்தது. இப்போது நாம் எங்கு வந்தடைந்திருக்கிறோம் என்று சற்று நினைத்துப் பாருங்கள்.**

**இந்த மாற்றங்களுக்கு விதை தூவிய வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவில் நான் நேரில் கலந்துகொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.